(புளியங்குடியில் நடைபெற்ற மார்க்கப் பிரச்சாரக் கூட்டத்தில், கேள்வி, பதில் நேரத்தில் பதிலளிக்க நேரமில்லாதவைகளை பத்திரிக்கை மூலம் பதில் தரப்படுவதாக கூறியிருந்தோம். அவைகளை இங்கு காணலாம். நபர்களின் பெயர் மட்டுமே தரப்பட்டுள்ளது; சில வினாக்கள் பெயர் குறிப்பிடப்படாமலும் உள்ளது).

***ஐயம் :*** இன்று சென்னை போன்ற நகரங்களில் பாங்கு சொல்லக்கூட தடை விதிக்கப்படுகின்றது. இப்பொழுது இது போன்ற தவறுகளை சுட்டிக்காட்ட ஒரு அமைப்புத் தேவை என்பது காலத்தின் கட்டாயம்தானே?

*நூர் முஹம்மது*

***தெளிவு :*** நபி(ஸல்) அவர்களின் காலத்தில் இஸ்லாத்தின் மூலக்கொள்கையான **"லாயிலாஹ இல்லல்லாஹு"** என்பதை பிரகடனப் படுத்துவதற்கே கடுமையான எதிர்ப்பு இருந்தது. அதை சொன்ன எண்ணற்ற ஸஹாபாக்கள் சித்ரவதை செய்யப்பட்டனர்; குற்றுயிராய் குருதி சிந்தினர். அப்போதெல்லாம் நபி(ஸல்) அவர்கள் அதற்கென எந்த ஒரு தனி அமைப்பையும் ஏற்படுத்தவில்லை. அகிலங்களின் ரப்பாகிய அல்லாஹுதஆலாவின் மார்க்கத்திலிருந்து கொண்டுதான் எதிர்ப்புக்களை சமாளித்து வந்தார்கள். அந்த முன் மாதிரி நமக்கு இன்னும் படிப்பினை தராதது, புரிந்து கொள்ளும்படியாக இஸ்லாம் இன்னும் எடுத்து வைக்கப்படவில்லை என்பதையேக் காட்டுகிறது.

அமைப்புகளினால் ஏற்பட்ட அவலங்களை அனுபவித்தும் இன்னும் உங்களுக்கு படிப்பினை தரவில்லையே! சகோதரர்களாய் வாழவேண்டிய முஸ்லிம்கள் சண்டைக்காரர்களாக மாறிவிட்டது இந்த அமைப்புகளினால்தானே.

பிரச்சனைகளை அனைத்து முஸ்லிம்களும் ஒன்றிணைந்து அணுகினாலே தீர்வு ஏற்பட வாய்ப்பிருக்கும் போது, அமைப்புகளை ஏற்படுத்தி ஒற்றுமையைக் குலைக்க நாம் காரணமாகி விடக்கூடாது.

-------------------------------------------

***ஐயம் :*** தவ்ஹீது என்று சொல்லி ஒன்றாக இருந்த நீங்கள் இப்போது ஏன் பிரிந்து விட்டீர்கள். மார்க்க அடிப்படையிலா? சமுதாய அடிப்படையிலா?

***M.*** *அசன் மைதீன்*

***தெளிவு :*** நாங்கள் முஸ்லிம்கள் என்று கூறுகிறோமே அல்லாமல் தவ்ஹீது என்று கூறிவதிலேயே. நாம் எவரிடமிருந்தும் பிரியவில்லை; எம்முடன் இருந்தவர்கள்தான் பிரிந்து விட்டார்கள். பிரிந்தவர்கள் ஒரே ஒரு அமைப்பில் மட்டும் இதுவரை இருந்திருந்தால், எமது கூற்று அல்லது பிரிந்தவர்கள் கூற்று என்ற

இந்த இரண்டில் ஒன்று மட்டுமே குர்ஆன், ஹதீஸின்படி சரி என எண்ண முடியும். ஆனால் பிரிந்தவர்கள் இன்னும் சிதறல்களாகி விட்டனர். எனவே அவர்களின் பிரிவு மார்க்க அடிப்படையிலும் இல்லை; சமுதாய அடிப்படையிலும் இல்லை; உலகாதாய அடிப்படையிலேயே பிரிந்தார்கள் என்று எண்ணம் கொள்ள பற்பல சான்றுகள் புற்றீசல்களாய் புறப்பட்டுக் கொண்டிருக்கின்றன. நிதானமாய் நடுநிலையோடு நிகழ்வுகளை உற்று நோக்குங்கள். நீங்களே தெரிந்து கொண்டு தெளிவு பெறுவீர்கள்.

-------------------------------------------

***ஐயம் :*** தமிழகத்தில் முஸ்லிம் லீக் துவங்கப்பட்டு 50 ஆண்டாக ஒற்றுமையுடன் முஸ்லிம்கள் வாழ்ந்து வந்தனர். அப்போதே தேசிய லீக் ஒன்று உதயமாகியது. அப்போதெல்லாம் தூங்கி விட்டு, தாங்கள் தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம் 90 சதவீதம் மக்களிடம் சென்றடைந்த பின் தற்போது படு சுறுசுறுப்பாக அதனை எதிர்த்துக் கூட்டம் போடுவது ஏன்?

***தெளிவு :*** முஸ்லிம் லீக்கும், தேசிய லீக்கும் மத்ஹபுவாதிகளால் ஏற்படுத்தப்பட்டவை. ஏப்ரல் 86ல் விழிப்புணர்வு பெற்று எமது பத்திரிக்கையை ஆரம்பித்தோம்.

மத்ஹபுகள் (பிரிவுகள்) இஸ்லாத்தில் இல்லை என்பதை அறிந்த பின்பே பத்ரிக்கை ஒன்று உதயமானது. இதனை சரி கண்ட அன்றைய த.மு.மு.க.வின் ஆரம்பக்கட்ட அமைப்பாளர் பிரிந்து சென்றதற்காக குர்ஆன், ஹதீஸ் அடிப்படையில் காரணத்தைக் கூறி விடவில்லை. சேற்றை வாரி இறைத்துத்தான் வெளியேறினார். எங்கெங்கோ இருந்தார்; இருந்த இடங்களிலுள்ளவர்களின் மீதெல்லாம் சேற்றைவாரி இறைத்து விட்டு, புதுப்புது பரிணாமங்களில் வளர்ச்சி அடைந்து, த.மு.மு.க.வை ஆரம்பித்து விட்டு அதன்மீது சேற்றைவாரி இறைத்து விட்டு, இன்று புதிய கோணத்தில் களமிறங்கியிருக்கிறார். குர்ஆன், ஹதீஸ் என்பதில் எல்லாம் அவருக்கு அக்கறை இல்லை என்பதை எடுத்துக்காட்ட எமது சுறு சுறுப்பு தவிர்க்க முடியாத அவசியமாகி விட்டது என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.

-------------------------------------------

***ஐயம் :*** நான் விடியல் வெள்ளி மாத இதழ் போஸ்டர் ஒட்டுவேன். இதன் காரணமாக நான் தவ்ஹீது பள்ளியில் என்னை தொழுகைக்கு அனுமதிப்பதில்லை. இது ஏன்? இது கூடுமா? விளக்கம் தரவும்.

*__K.__ முஹம்மது அலி ஜின்னா*

***தெளிவு :*** **"ஹய்ய அலஸ் ஸலாத்"** தொழுகைக்கு வாருங்கள் என மக்களை அழைப்பதற்கு மட்டுமே பள்ளி நிர்வாகத்தினருக்கு அனுமதி உண்டு. 'தொழுகைக்கு வராதீர்கள்' என்று சொல்லக்கூடியவர்கள்,

‘தொழுகைக்கு வாருங்கள்’ என்று பாங்கின் மூலமாக அழைப்பது ஏன்? சொல் ஒன்று செயல் வேறு ஆக செயல்படும் முனாஃபிக்குகளா அவர்கள்? தங்களை ஆலிம்கள் (அறிஞர்கள்) எனக்கூறிக் கொள்பவர்களின் கட்டளைகளின்படிதான் பள்ளி நிர்வாகிகள் செயல்படுகின்றனர். இந்த முனாஃபிக்தனத்தின் மூலவித்து இந்த ஆலிம்கள் தான்! அது சுன்னத் வல் ஜமாஅத் பள்ளியாக இருந்தாலும் சரி, தவ்ஹீத் பள்ளியாக இருந்தாலும் சரியே! அமைப்புகள், பிரிவுகள் ஏற்பட்ட அலங்கோலங்களின் அருவருப்பான வெளிப்பாடுகளே இவைகள். தாங்கள் எந்தப் பத்திரிக்கைக்காகப் போஸ்டர் ஒட்டுகிறீர்களோ அப்பத்திரிக்கையும் ஒரு அமைப்பின் சார்பாக செயல்பட்டுக் கொண்டிருப்பதை மறந்து விடாதீர்கள்.

--------------------------------------------

***ஐயம் :*** இஸ்லாமிய சமுதாயத்தில் அல்லாஹ் ஒருவன்தான் கடவுள். அந்த கடவுள் எந்த மாதிரியான இறை வணக்கத்தை விரும்புகிறான். ஹனஃபியா, ஷாஃபியா, ஹன்பலியா, மாலிக்கிய்யா, தவ்ஹீதா என்ற விபரத்தை தெரியப்படுதவும். ***M.*** *அப்துல் காதர்*

***தெளிவு :*** தங்கள் வினாவிலேயே விடை ஒளிந்து கொண்டிருப்பதைத் தேடிக் கண்டு பிடிங்கள். **‘இஸ்லாமிய சமுதாயம்’** எனக்குறிப்பிட்டிருக்கிறீர்கள் அல்லவா? இஸ்லாம் எனும் பெயரைத் தந்ததே ஒரே கடவுளான அல்லாஹ்தான் (பார்க்க அல்குர்ஆன் 5:3) ஹனஃபி, ஷாஃபி, மாலிகி, ஹன்பலி, தவ்ஹீதி என்றெல்லாம் அல்லாஹ் அறிமுகப்படுத்தவில்லை. அல்லாஹ்வின் மார்க்கமான இஸ்லாத்தை ஏற்று அதை மட்டுமே மக்களுக்கு அறிமுகப்படுத்திய இறைத்தூதர், நபி(ஸல்) அவர்கள் **“என்னை எவ்வாறு தொழக்கண்டீர்களே அவ்வாறே நீங்களும் தொழுங்கள்”** என்று இஸ்லாத்தின் தொழுகையை அறிமுகப்படுத்தினார்கள். ஹனஃபி தொழுகை, ஷாஃபி தொழுகை, மாலிகி தொழுகை, ஹன்பலி தொழுகை, தவ்ஹீது தொழுகை என்றெல்லாம் அறிமுகப்படுத்தவில்லை. இஸ்லாம் கூறும் குர்ஆன், ஹதீஸ் வழிகாட்டலின்படியான தொழுகையை, ஏறக்குறைய தவ்ஹீத்வாதிகள் என்போர் மட்டுமே கூறி வருகிறார்கள். இதனால் இஸ்லாத்தின் தொழுகையை தவ்ஹீத் தொழுகை என்று ஆக்கி விடாதீர்கள். தவ்ஹீத் என்ற பெயரில் கூட ஜமாஅத்தை அறிமுகப்படுத்த எவருக்கும் அதிகாரம் கிடையாது. அதுவும் ஒரு பிரிவாகிவிடும் என நாம் கூறி வருவது உண்மைதான் என்பதை தங்கள் கேள்வியும் நிரூபித்து விட்டது. எப்படியென்றால் மத்ஹபுகள் என்ற பிரிவுகளின் வரிசையிலேயே தாங்கள் தவ்ஹீதையும் சேர்த்து இருப்பதுதான் இதற்கான சான்று.

--------------------------------------------

***ஐயம் :*** தப்லீக் ஜமாஅத்தில் இருந்த நீங்கள் நஜாத் என்ற பிரிவை ஏற்படுத்தினீர்கள். பிரிவு இருக்கக்கூடாது என்று சொல்லும் நீங்கள் இந்த பிரிவை ஏன் ஏற்படுத்தினீர்கள்? தப்லீக்கில் இருந்தே

நீங்கள் நேர்வழிபடுத்தி இருக்கலாமே!

*S. முகைதீன், ஜின்னாநகர் 3வது தெரு, புளியங்குடி*

***தெளிவு :*** பல முறை பதிலளிக்கப்பட்ட வினா இது. இருப்பினும் சுருக்கமாகக் கூறுகின்றோம். தப்லீக் ஜமாஅத்தினர் அவர்களின் வேத நூலாக குர்ஆனை எடுத்துக் கொள்ளாமல், அமல்களின் சிறப்புக்கள் புத்தகத்தை எடுத்துக் கொண்டிருக்கும் தவறான முரட்டுப் படிவாதக் கொள்கையை அவர்களின் செயல்பாடு களிலிருந்து அறிந்தவுடன் நாம் அதிலிருந்து வெளியேறினோம். எந்த பிரிவையும் நாம் ஏற்படுத்தவில்லை. வேத நூலான குர்ஆன் கூறும் குர்ஆன், ஹதீஸ் கொள்கைகள் மட்டுமே இஸ்லாம் என்பதை மக்களுக்கு எடுத்துச் சொல்லவே ஏப்ரல் **1986**ல் நஜாத் எனும் பெயரில் மாத இதழ் ஆரம்பிக்கப்பட்டது. பிரிவுகளை சரிகண்டவர்கள் பத்திரிக்கையின் பெயரையே குன்ஆன், ஹதீஸ் கூறுபவர்களுக்கு 'நஜாத்காரர்கள்' என்று சூட்டி மகிழ்ந்தார்கள் மகிழ்ந்து வருகிறார்கள் என்பதே நடைமுறை உண்மை.

இஸ்லாத்திற்கெதிரான கொள்கைகளைக் கூறிக்கொண்டிருக்கும் தப்லீக்கில் இருந்து கொண்டே நேர்வழிப்படுத்த வேண்டிய அவசியம் என்ன என்பதை நீங்கள் தான் விளக்க வேண்டும். இஸ்லாத்தில் இருந்து கொண்டுதான் நேர்வழிப்படுத்தலை செய்யவேண்டும். எவ்வித அமைப்புகளிலிருந்து கொண்டும் செய்யக்கூடாது என்பதை மறந்து விடாதீர்கள்.

-------------------------------------------

***ஐயம் :*** பள்ளியில் அடி வாங்கினாலும் அங்குதான் தொழவேண்டும் என்று சொல்லும் நீங்கள், நீங்கள் எல்லோரும் சேர்ந்துதானே முதலில் பள்ளியிலிருந்து வெளியாகினீர்கள். இதற்கு யார் பொறுப்பு? நீங்கள்தானே!

*இப்ராஹீம்*

***தெளிவு :*** நாங்களாக பள்ளியிலிருந்து வெளியேறினால் அதற்கு பொறுப்பு நாங்கள் ஆவோம். வெளியேற்றப்பட்ட போது கூட, மீண்டும் மீண்டும் வெளியேற்றப்பட்ட பள்ளிக்கே சென்று தொழுது வந்தோம். தொழுது வருகின்றோம்.

இந்த பிரச்சனைகளுக்கு பயந்து ஒதுங்கியவர்கள் தனிப்பள்ளிக் கட்டிக்கொண்டனர். இன்னும் பயந்தவர்கள் தமது பயந்தாளித்தனம் வெளியே தெரிந்து விடக்கூடாது என்பதற்காக குறிப்பிட்ட இமாம்களின் பின்னால் தொழக்கூடாது என்று தான் தோன்றித்தனமான ஃபத்வாக்களை வாரி இறைத்து, பெண்களைப்போல வீட்டிலேயே தொழுது கொள்ளும் அடைகாக்கும் கோழிகள் போல் ஆகி விட்டனர்.

பள்ளியிலிருந்து வெளியேற்றப்பட்ட பின்பும் அதே பள்ளிகளுக்கே சென்று தொழுது வரும் நாங்களா இதற்கு பொறுப்பாளி; அல்லது மத்ஹபு பள்ளிகளை விட்டு விட்டு தனிப்பள்ளி கட்டிக் கொண்டவர்கள் இதற்கு பொறுப்பாளிகளா? அல்லது இமாம்களின் பின்னால் தொழக்கூடாது எனக்கூறி ஒதுங்கிக் கொண்டவர்கள் பொறுப்பாளிகளா? என தாங்களே சிந்தித்து முடிவெடுத்துக் கொள்ளுங்கள்.

-------------------------------------------

***ஐயம் :*** 3:14ம் வசனத்தின் பொருள் என்ன? குறிப்பாக '**ஆண்மக்கள்**' என்று குறிப்பிடப்பட்டுள்ளதே. அதைப்பற்றியும் கூறவும். ***A.*** *இர்ஃபான், தஞ்சை*

***தெளிவு :*** அல்குர்ஆன் 3:14ம் வசனம் கீழே காட்டப்பட்டுள்ளது.

> **"பெண்கள், ஆண் மக்கள், பொன்னிலும், வெள்ளியிலுமான பெருங்குவியல்கள், அடையாளமிடப்பட்ட குதிரைகள், (ஆடு, மாடு, ஒட்டகம் போன்ற) கால் நடைகள், சாகுபடி நிலங்கள் ஆகியவற்றின்மீதுள்ள இச்சை மனிதர்களுக்கு அழகாக்கப்பட்டிருக்கிறது. இவை உலக வாழ்வின் (நிலையற்ற) சுகப் பொருள்களாகும். அல்லாஹ்விடத்திலோ அழகான தங்குமிடமுண்டு".** *அல்குர்ஆன் 3:14*

**"ஆண் மக்கள்மீதுள்ள இச்சை மனிதர்களுக்கு அழகாக்கப்பட்டிருக்கிறது"** என்று மேற்கண்ட வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதால், அதன் அர்த்தத்தை குறிப்பாக அறிந்து கொள்ள விரும்புகிறீர்கள்.

தாங்கள் எண்ணும் எண்ணத்தை இந்த வசனம் வெளிப்படுத்தவில்லை என்பதை கீழ்க்கண்ட வசனம் தெளிவுபடுத்துவதைப் பாருங்கள்.

> **"லூத்(நபி) தம் சமூகத்தாரிடம் கூறினார் : உலகத்தில் எவருமே உங்களுக்கு முன் செய்திராத மானக்கேடான ஒரு செயலைச் செய்யவா முனைந்தீர்கள்?"**
>
> **"மெய்யாகவே நீங்கள் பெண்களை விட்டு விட்டு, ஆண்களிடம் காம இச்சையை தணித்துக் கொள்ள வருகிறீர்கள். நீங்கள் வரம்பு மீறும் சமூகத்தாராகவே இருக்கின்றீர்கள்".** *அல்குர்ஆன் 7:80,81*
>
> **"(லூத் நபி) அவர்களுடைய சமூகத்தார், அவரிடம் விரைந்தோடி வந்தார்கள்; இன்னும் முன்னிலிருந்தே அவர்கள் தீய செயல்களே செய்து கொண்டிருந்தார்கள். (அவர்களை நோக்கி லூத்) "என் சமூகத்தார்களே! இதோ இவர்கள் என் புதல்விகள்; இவர்கள் உங்களுக்கு(த் திருமணத்திற்கு)ப் பரிசுத்தமா னவர்கள்; எனவே நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள் ......."** என்று கூறினார்.

*அல்குர்ஆன் 11:78*

**“(லூத் நபி) இதோ! என் புதல்வியர் இருக்கிறார்கள். நீங்கள் (ஏதும்) செய்தே தீர வேண்டுமெனக் கருதினால் (இவர்களைத் திருமணம்) செய்து கொள்ளலாம்”** என்று கூறினார்.

**“(நபியே) உம் உயிர்மீது சத்தியமாக, நிச்சயமாக அவர்கள் தம் (கேவலமான செயல்களின்மீது கொண்டுள்ள) மதி மயக்கத்தில் தட்டழிந்து கொண்டிருந்தார்கள்”.**

**“ஆகவே பொழுது உதிக்கும் வேளையில், அவர்களை பேரிடி முழக்கம் பிடித்துக் கொண்டது; பின்பு அவருடைய ஊரை மேல் கீழாகப் புரட்டி விட்டோம்; இன்னும் அவர்கள்மேல் சுடப்பட்ட களி மண்ணாலான கற்களைப் பொழியச் செய்தோம்”.**

*அல்குர்ஆன் 15:71-74*

ஆண்கள் ஆண்களின்மீது மோகம் கொள்வது தடுக்கப்பட்டுள்ளது என்பதையும் ஆண்கள் பெண்களை திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்பதும் மேற்கண்ட வசனங்களில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. ஆண்கள் ஆண்களின்மீது மோகம் கொள்ளும் செயல் அல்லாஹ்வின் கோபத்திற்கு சாபத்திற்கும் உள்ளாக்கி விடும் என்பதையும் மேற்கண்ட 15:73-74 வசனங்கள் குறிப்பிடுகின்றன.

**“..... உங்களுக்குப் பிடித்தமான பெண்களை மணந்து கொள்ளுங்கள்; இரண்டிரண்டாகவோ, மும்மூன்றாகவோ, நன் நான்காகவோ; ......”**

*அல்குர்ஆன் 4:3*

**“இன்னும் உங்களில் வாழ்க்கைத் துணை இல்லா (ஆண் பெண்டி)டிருக்கும், அவ்வாறே ஸாலிஹான உங்கள் (ஆண், பெண்) அடிமைகளுக்கும் விவாகம் செய்து வையுங்கள்.....”** *அல்குர்ஆன் 24:32*

ஆண்கள், பெண்களையும், பெண்கள் ஆண்களையும் (முறைப்படி) திருமணம் செய்யுமாறு மேற்கண்ட வசனங்கள் தெளிவுபடுத்துகின்றன. எனவே தாங்கள் எண்ணும் எண்ணப்படி 3:14 வசனம் இல்லை என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

3:14 வசனம் தெரிவிப்பது யாதெனில், **“(மனைவிகளாகிய) பெண்கள் (ஆண்கள்மீதும்), (கணவர்களாகிய) ஆண்கள் (பெண்கள்மீதும்), (மக்கள் அனைவரும்) பொன்னிலும், வெள்ளியிலுமான பெருங் குவியல்கள் (மீதும்), அடையாளமிடப்பட்ட குதிரைகள், கால்நடைகள், சாகுபடி நிலங்கள் ஆகியவற்றின் மீதும் (கொண்டுள்ள) இச்சை (விருப்பம்) மனிதர்களுக்கு அழகாக்கப் பட்டிருக்கிறது. (எனினும்) இவை உலக வாழ்வின் சுகப் பொருள்களாகும். அல்லாஹ்விடத்திலோ அழகான இருப்பிடம் உண்டு”** என்பதேயாகும். *அல்குர்ஆன் 3:14*

-------------------------------------------

***ஐயம் :*** கழுதையின் மாமிசம் ஹலாலானது என்றும் ஸஹாபாக்கள் கழுதை இறைச்சியை சாப்பிட்டிருப்பதாகவும் சிலர் கூறுவது உண்மையா?

***I.** அன்வர், ராமநாதபுரம்*

***தெளிவு :*** கழுதையின் மாமிசம் ஹலாலானது என்று எவரும் கூறி நாம் இதுவரை கேள்விப்பட்டதில்லை. சஹாபாக்கள் அதை உண்டிருப்பதாகக் கூறுவது பொய். இதனை பொய் என நிரூபிக்கும் ஹதீஸ் ஒன்று புகாரீயில் இடம் பெற்றுள்ளதை கீழே பிரசுரித்துள்ளோம். பார்வையிடுங்கள்.

**“கைபர் கோட்டையின் முற்றுகையில் ஈடுபட்டிருந்த நாங்கள் பசி பட்டினியால் பாதிக்கப்பட்டிருந்தோம். கைபர் போர் ஆரம்பித்த நாளன்று நாங்கள் காட்டுக் கழுதைகளை வேட்டையாடிப் பிடித்து அவற்றை அறுத்தோம் (அவை) பாத்திரங்களில் கொதிக்கத் தொடங்கிய போது, அல்லாஹ்வின் தூதருடைய அறிவிப்பாளர் “பாத்திரங்களைக் கவிழ்த்து விடுங்கள். கழுதைகளின் இரைச்சிகளில் சிறிதும் உண்ணாதீர்கள்” என்று அறிவித்தார். இந்த அறிவிப்பைச் செவியுற்ற நாங்கள் “(அக் கழுதையாகிய) அதிலிருந்து ‘குமுஸ்’ எனும் நிதி செலுத்தப்படாமல் இருந்ததால்தான் இப்படி அறிவிக்கப்படுகிறது” என்று சொன்னோம். “(அப்படியல்ல) அதை என்றைக்குமே நபி(ஸல்) அவர்கள் தடை செய்து விட்டார்கள்”** என்று மற்றவர்கள் கூறினார்கள்.

*அறிவிப்பவர் : அப்துல்லாஹ் பின் அபீ அவ்ஃபா(ரழி),*
*நூல் : ஸஹீஹுல் புகாரீ பாகம் 3, ஹதீஸ் எண் 3155(ரஅக)*

**அறப்போரில் எதிரிகள் விட்டுச்செல்லும் பொருட்களுக்கு “ஃகனீமத்” (போர்ச் செல்வம்) என்பர். இவ்வாறு கிடைக்கும் செல்வத்தை 5 பாகங்களாகப் பிரித்து, 4 பாகங்கள் போரில் கலந்து கொண்ட வீரர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும். மீதியுள்ள ஒரு பாகத்தை குமுஸ் என்பதாகும் இந்த ஒரு பாகம் அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்களுக்கு உரியதாகும்; அவர்கள் அந்த ஒரு பாகத்தை தமக்குரிய நிதியாக அதாவது ஆட்சித் தலைவர் நிதியாக வைத்துக் கொண்டு, உரிய இனங்களில் செலவிடுவார் கள். இறைத்தூதருக்குப்பின், அரசுக் கருவூலத்தில் இந்த பங்கு சேர்க்கப்பட்டு உரியவர்களுக்கு வழங்கப்பட்டது.** *ஃபத்ஹுல் பாரீ*

-------------------------------------------

***ஐயம் :*** எந்த பாவமும் செய்திராத சிறு குழந்தைகள் சிறு வயதில் இறந்து விட்டால் அவர்கள் சுவர்க்கவாதிகள் தானே**?** *முஹம்மது இஸ்மாயீல், திருப்பூர்*

***தெளிவு :*** தங்களுக்கேற்பட்டுள்ள ஐயத்திற்கான தெளிவை கீழே கொடுக்கப்பட்டுள்ள இரு ஹதீஸ்களிலிருந்து பெற்றுக்கொள்ளுங்கள்.

> **“ஒரு குழந்தை இறந்து விட்டது. அப்பொழுது நான், ‘அதற்கு நல்வாழ்வு உண்டாகுக! அது சுவர்க்கத்தின் சிட்டுக் குருவிகளில் ஒரு சிட்டுக் குருவியாகும்” என்று கூறினேன். அப்பொழுது நபி(ஸல்) அவர்கள், “நிச்சயமாக, அல்லாஹ் சுவர்க்கத்தையும் படைத்தான்; நரகத்தையும் படைத்தான். பின்னர் அதற்குரியவர்களையும் இதற்குரியவர் களையும் படைத்தான் என்பதை நீர் அறிய மாட்டீரா?”** என்று கேட்டார்கள்.

*அறிவிப்பவர் : அன்னை ஆயிஷா(ரழி),*
*நூல்கள் : முஸ்லிம், அபூதாவூத், நஸயீ*

> **“இணை வைப்பவர்களின் குழந்தைகளைப் பற்றி நபி(ஸல்) அவர்களிடம் கேட்கப் பட்டதற்கு அவர்களைப் படைக்கும்போதே அவர்கள் என்ன செய்வார்கள் என்பதை மிகவும் அறிந்தவனாக அல்லாஹ் இருந்தான்”** என்று கூறினார்கள்.

*அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ்(ரழி),*
*நூல்கள் : புகாரீ, முஸ்லிம், அபூதாவூத், நஸயீ*